பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 கார்த்திகை 11 முஹர்ரம் 17 இதழ் 287

யாழ்ப்பாணம் புதன்கிழமை 26-11-80

RECEIVED 1980-11-27 PERIODICALS DIVISION ... LIBRARY

## யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த வெளிவாரிப் பட்டதாரிகளின் முதல் தேர்வுப் பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நடத்துவதென பல்கலைக்கழக மான்யக்குழு தீர்மானித்துள்ளது.

இப் பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நடாத்தவேண்டுமென பல்கலைக் கழகமான்ய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகேயைச் சந்தித்து எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது தெரிந்ததே. (வெ)

# பாராளுமன்றத்தில் எதிரொலித்த யாழ். 'ஐந்து கட்சிக் கூட்டம்!

## பிரதமர் எழுப்பிய சந்தேகம்: 'அமிர்' அளித்த விளக்கம்

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஐந்து கட்சிகளின் கூட்டம்; நேற்று நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் எதிரொலித்தது.

இக் கூட்டம் பற்றியும், சில பத்திரிகைளில் வெளிவந்த செய்திகள் குறிந்தும் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கூறியதும், இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் விளக்கமளிக்க முன் வந்ததும், யாழ். ஐந்துகட்சிக்கூட்டம் பெருமளவு சர்ச்சைக்குள்ளானது.

பாராளுமன்றம் நேற்று மீண்டும் கூடிய பொழுது; வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் ஆரம்பமானது. ஒரு கட்டத்தில்; வேலை நிறுத்தம் செய்தவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசியபோது பிரதமர் குறுக்கிட்டு; "அவர்கள் வேலைக்கு வராததால் வேலை இழந்துள்ளனர்" என்று கூறினர்.

வேலைஇழந்தவர்களுக்கு அரசாங்கம் மீண்டும் வேலை வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கோரிய பொழுது, பிரதமர் திரு. ஆர் பிரேமதாசா மீண்டும் குறுக்கிட்டு; யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஐந்து கட்சிகளின் கூட்டம் பற்றி பிரஸ்தாபித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

## 'ஆட்சிக்கு எதிராக வடக்கில் புதிய சக்தி!' வவுனியாவில் சிறிமா

(வவுனியா)

இனப்பாகுபாடும், கட்சிபேதமும். அதிகார வெறியுமே ஆட்சிமுறைக்கு உகந்தது என்ற ஆட்சியாளரின் எண்ணத்தைத் தகர்த்தெறியும் புதிய சக்தி ஒன்று வடபகுதி மக்களிடையே இன்று முளை விட்டுள்ளது.

இவ்வாறு முன்னாள் பிரதம மந்திரியும், சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

வவுனியா புத்தவிகாரைமுன்றலில் நடைபெற்ற வழிபாட்டுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### கோலாகலமான வரவேற்பு

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஓமந்தை, தாண்டிக்குளம், நொச்சிமோட்டை ஆகியஇடங்களில் பெருந்திரளான மக்கள் கூடிநின்று மலர்த் தட்டுகளை ஏந்திநின்று கோலாகலமாக வரவேற்றனர். இவ்விடங்களில் வழிபாட்டுத் தலங்களில் விசேட பூசைகள் நடைபெற்றன.

வவுனியாநகரமெங்கும்தோரணங்கள்கட்டி பெருந்திரளான மக்கள் கூடிநின்று வரவேற்றனர். வவுனியா புத்தவிகாரையில் சமய கலாச்சார முறைப்படி திருவாளர்கள் பி. அப்புகாமி, பி. தெய்வேந்திரம், ஜனாப் ஏ. ரசாக், ஜனாப். எஸ். எம். யூசுப் ஆகியோர் வெற்றிலை வழங்கி திருமதிபண்டாரநாயக்காவை வரவேற்றனர்.

பௌத்த பிக்குகள் பிரித்ஓதி திருமதி பண்டாரநாயக்காவை ஆசிர்வதித்தனர்.

அடுத்து விகாரை முன்றலில் திரு. மைத்திரிபால சேனநாயக்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திருமதி பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது;

அவர் தொடர்ந்தும் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

எமது ஆட்சிக் காலத்தில் பலதரப்பட்ட சலுகைகளையும் அனுபவித்து வந்த விவசாயிகள் அரச ஊழியர்கள், பொது மக்கள் எல்லோரும் கடந்த வருடகாலமாக கட்டுப்பாடில்லாத விலையேற்றம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு வேலை வாய்ப்பு இன்மை போன்ற பிரச்சினைகளினால் துன்பமடைந்துள்ளார்கள் இவைகளை நீக்கி ஜனநாயகத்தைப் பேணி மக்களுக்குப் புதுவாழ்வளிக்க சுதந்திரக் கட்சி ஒன்றினாலேயே முடியும் என்பதை இன்று நாட்டு மக்கள் உணர்ந்துவிட்டார்கள்.

### மக்கள் கூட்டம் சான்று!

கட்சி பேதமும், இனப்பாகுபாடும், அதிகார வெறியுமே ஆட்சி முறைக்கு உகந்தது என்ற ஆட்சியாளர்களின் எண்ணத்தைத்தகர்த்தெறியும் புது சக்தி ஒன்று வடபகுதி மக்களிடையே இன்று முளைவிட்டுள்ளது. இதற்கு செல்லுமிடமெல்லாம் திரள் திரளாகக் கூடுகின்ற மக்கள் கூட்டமே சான்றுபகர்கின்றது. (ஏ)

## இரவு பஸ் சேவைகள் 9-30 மணிவரை மட்டும்

### புதிய திட்டம் டிசம்பர் முதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணை பஸ் நிலையத்திலிருந்து தூர இடங்களுக்கு புறப்பட்ட பஸ்கள் யாவும் இன்று முதல் யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்தே புறப்படும்.

பண்ணை பஸ் நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கு பஸ்கள் புறப்பட்டுச் செல்வதால் பிரயாணிகள் பெரிதும் அசௌகரியமடைவதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகராவுக்கு பொது மக்கள் செய்துள்ள புகாரையடுத்தே நீண்ட தூர பஸ்கள் இன்று முதல் யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் வ. போ. ச.வின் பஸ்கள் யாவும் இரவு 9-30 மணியுடன் தமது சேவைகளை முடித்துக் கொள்ளவுள்ளன. இப் பஸ்கள் கடந்த காலங்களில் இரவு 10-00 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. எரிபொருள் தட்டுப்பாட்டை குறைப்பதற்காகவும், வீண் விரயங்களைத் தடுப்பதற்காகவும் பஸ் சேவையை இரவு 9-30 மணியுடன் முடித்துக்கொள்வதென வ. போ. ச. தீர்மானித்துள்ளது.

## ரங்கநாயகி பதவியேற்றார்

(கொழும்பு)

திருமதி ரங்கநாயகி பத்மநாதன், பொத்துவில் தொகுதியின் இரண்டாவது எம் பி. யாக பாராளுமன்றத்தில் சபாநாயகர் முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (ம)

## 40 பேர் பலி

புதுடில்லி, நவ. 25.

டில்லி போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பஸ், இன்று காலை விபத்துக்குள்ளானதில் நாற்பது பேர் பலியானார்கள். 30 பேர் காயமடைந்தனர்.

டில்லி நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் பாலத்துடன் மோதி, ஆற்றில் விழுந்ததில் இப்பயங்கர விபத்து ஏற்பட்டது

ஹோம் பினன்ஸ் லிமிட்.

82, கன்னாதிட்டி ரேட், யாழ்ப்பாணம்.

வருடாந்தம் ஆகக்கூடுதலான

25% வட்டியை

வழங்குகின்றது

ரூபா 1000/-க்கு மேற்பட்ட எந்த முதலீட்டிற்கும் மாதாந்தம் வட்டி வழங்கப்படும்

உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்

தலைமையகம்: 463, காலி வீதி கொழும்பு-3.

தொலைபேசி : 89190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த ரக உதைபந்தாட்ட பந்துகள் எம்மிடம் கிடைக்கும் விபரங்கட்கு: 278, ஆஸ்பத்திரி வீதி, (ஆஸ்பத்திரிக்கு முன்பாக), யாழ்ப்பாணம். 7433

மானிப்பாய் ஆஸ்பத்திரிக் கருகாமையில் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டுடன் மூன்றரைப் பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; B. S. S. நாதன், ஆஸ்பத்திரி ரோட், மானிப்பாய். 7434

1 மவோகினி மரம், 1 மலைவேப்புமரம், 2 வேப்பை மரம். திருமதி தருமலிங்கம், புதுச் செம்மணி வீதி, நல்லூர் வடக்கு. 742

EY 4467 இலக்கமுடைய சோமசேற் கார் விற்பனைக்கு உண்டு. பார்வையிட 28-11-80-க்கு முன். விபரங்களுக்கு: க. க. மார்க்கண்டு, சின்னுலடி, தங் சாலை, காரைநகர். 7429

யாழ்ப்பாணமாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கு 11-12-80 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கந்தப்பசேகரம் வீதி வடிகால அமைத்தல்.
2 ஸ்ரீகாமாட்சி ச. ச. நிகுளத்துக்கும் வாய்க்காலுக்குமான அணைச்சுவர் அமைத்தல்.
3. கனகசபை அவெனியூ வடிகால் அமைத்தல்.
4 கந்தப்பசேகரம் ஒழுங்கை மதகு அமைத்தல்.
5. இலந்தைக்குளம் வடிகால் அமைத்தல்.

கேள்விப்பத்திரங்கள் மாநகராட்சி மன்றத்துடனே அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களுடனே ரூபா 5000/-க்குமேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படும்.

ஒவ்வொரு கேள்விக்கும் வைப்புப் பணமாக ரூபா 100/-ம் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 25/-ம் செலுத்தியதின் பேரில் 08-12-80ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரை மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரால் வழங்கப்படும் படிவங்கள்மீது கேள்விகள் இருபிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்.

வேலைப்பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
24-11-80. 743[illegible]

யாழ். மாவட்டத்தில்

# இடமாற்றம்பெறும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் பலர் இடமாற்றஞ் செய்யப்படவுள்ளனர். இவ்விடமாற்றங்கள் அடுதத்மாதத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். திருச்சிற்றம்பலம் பருத்தித்துறை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியாகவும். உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு சிசிறகுமார ஜெயசேகரா குருநகர் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியாகவும், உதவிபொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. தம்பாப்பிள்ளை கிளிநொச்சிப் பொலிஸ் நிலைய வழக்குத் தொடுநர் பகுதிப் பொறுப்பதிகாரியாகவும், உதவிப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் முனிதாசா ஆனைக்கோட்டை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியாகவும் மாற்றலாகிச் செல்கின்றர்.

ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சரத்சந்திரா வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும், குருநக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. விஜயந்திரா பளைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும், பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு.விஜயசூரியா காலிப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த அஹங்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் இடமாற்றம் பெறுகின்றனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. குணரட்ன பதுளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும், ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு சத்தியன் கொழும்புக்கும், புதுளை உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்தவெல ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும், சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொன் சுகுணேந்திரன் அம்பலாந்தோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும், பேலியகொடை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. ஜெயசூரியா சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

(கொ-அ)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## 1981-ம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவுசெய்தல்

மராமத்துப் பகுதி வேலைகளுக்குத் தேவையான பொருட்களை (கிறசர், சல்லிகள், கண்டகல், சுண்ணும்பு, தேங்காய் மட்டை, கிடுகு, கிறசர் தூள், கிறவல்) வழங்குவதற்குத் தகுதியுடைய வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் '1981ஆம் ஆண்டுக்கு மராமத்துப் பொருட்கள் வழங்குனர் பதிவு' எனக் குறிப்பிடப்பட்டு மாநகர ஆணையாளருக்கு அனுப்பப்படல்வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 05-12-80.

க. சிவஞானம்
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்.

வேலைப்பகுதி,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
19-11-80. 74[illegible]7


## தேவை

டிரான்ஸ் லங்கா இன்வெஸ்ற்மென்ற் லிமிட்
யாழ்ப்பாணக் கிளை ஸ்தாபனத்திற்கு
வரவேற்பாளர் / தட்டெழுத்தாளர் (பெண்)
தேவை
நல்லொழுக்கமுள்ளவராகவும், ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவராகவும் இருந்தல் வேண்டும்.
கல்வித்தகமை, நற்சான்றிதழ் முதலியவற்றுடன்
29-11-80க்கு முன் விண்ணப்பிக்கவும்.
18, நவீன சந்தை மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம். (7435)


## சன்மார்க்கசபை புதுவருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் வருடாந்த உறுப்பினர் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சபைத்தலைவர் கலைப்பேரரசு ஏ-ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில்பின் வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யம்பட்டனர்.

போஷகர்கள்.சட்டமா அதிபர் திரு.சிவா.பசுபதி இளைப்பாறிய சமூகசேவை உத்தியோகத்தர் திரு த.சின்னத்துரை,சி. தம்பிப்பிள்ளை, அ.கயிலாயபிள்ளை, மு.இராமலிங்கம். தலைவர். கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, உப-தலைவர் கலாகேசரி ஆ.தம்பித்துரை பொதுக்காரியதரிசி அதிபர் த. இராசரத்தினம், இணைக்காரியதரிசிகள் திரு. செ, அசோகமூர்த்தி, திரு. தி.முகானந்தன் தனதிகாரி திரு.ச,விசுவநாதன் நிர்வாக உறுப்பினர் திருவாளர்கள் மு.சபாரத்தினம், சி. இரத்தினம், பொ.இராசரத்தினம், ச,பழனிவேல், [illegible],இரவீந்திரன்,ம சிவபாலன் இ. ஸ்ரீகாந்தமூர்த்தி, செ.ஈஸ்வரபாலன, ம.சபாரத்தினம். வெளிப்பிரதேசப்பிரதிநிதிகளாக திருவாளர்கள் தா.இரா.சேந்தி, த.செல்லத்துரை சபை அபிவிருத்தி, வருடாந்தவேலைத்திட்டம்கிராம அபிவிருத்தி என்பன பற்றி அங்கத்தவர்கள் கருத்துப்பரிவர்த்தனையும் இடம் பெற்றது.

## சார்ஜன்டுகளாக பதவியுயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சார்ஜண்டுகளாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

வழக்குத் தொடுநர் பகுதியைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ருதி. எஸ். குணரத்தினம் போக்குவரத்துப் பகுதியைச் சேர்ந்த திரு எம். பரமானந்தம் வாகப்பகுதியைச் சேர்ந்த கான்ஸ்டபள் விஜயசிங்க ஆகியோரே சார்ஜண்டுகளாகப் பதவி உயர்வு பெற்றவர்களாவர் இவர்கள் தவிர வடபகுதியைச் சேசர்ந்த மேலும் ஆறு கான்ஸ்டபிள்கள் சார்ஜண்டுகளாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர் (கொ-அ)

## கலாசாலையின் புதிய அதிபர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் புதிய அதிபராக திரு க. புலேந்திரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று மூதூர் மல்லிகைத்தீவு மகாவித்தியாலய அதிபராக கடமையாற்றிய இவர் கொழும்புத்துறை, மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்.

# கருத்தடை செய்வோர் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் கருத்தடை செய்வோர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

இக் கருத்தடை சிகிச்சையில் கிராமப்புறத்தவர்கள் தான் அதிக அக்கறை செலுத்திவருகின்றார்கள்.

ஆனால் இவர்களுக்கான கருத்தடை ஊக்குவிப்புப் பணம் ஐந்நூறு ரூபாய் கச்சேரி திட்டமிடல் பகுதியினரால் உரிய நேரத்தில் வழங்கப்படுவதில்லை வன்று புகார் கூறப்படுகிறது.

இதனால் இவர்கள் இப்பணம் பெற இரவு எட்டு மணிவரை காத்து நிற்க வேண்டிய பரிதாப நிலையை அடைந்துள்ளனராம்.

# யாழ். நகரில் அமெரிக்க புகைப்பட கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க புகைப்படக் கண்காட்சி ஒன்று நேற்று முன்தினம் மாலை யாழ் பொதுசன நூல்நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இப்புகைப்படக் கண்காட்சியை அமெரிக்க ஸ்தானிகச் திரு. டொனுல் ருசெயின் திறந்து வைத்தார். இவ்வைபவத்தில்வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நீதியரசர்கள் பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், மாநகர ஆணையாளர்கள், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், மதகுருமார்கள், கலைஞர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

அமெரிக்கப் புகைப்படக்கலைஞரான திரு ஸ்டீபன் பெல்ஸ் என்பவரால் உலகின் பலபாகங்களிலும் பிடிக்கப்பட்ட பல புகைப்படங்கள் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

(கொ)

# இன்றைய பலன்

கார்த்திகைமாதம்

11ந் திகதி புதன்கிழமை

(26 - 11 - 80)

மேடம்: அருளும் பொருளும் இன்று இணைந்துகிடைக்கும். தொழில் துறையில் ஏற்படும் போட்டியில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும், சிலர் வாழ்க்கையில் அதிகாரப் பேறும் கிடைக்கலாம்.

இடபம்: தெளிந்தமனத்துடன் செயலாற்றப் புறப்படுவீர்கள், முயற்சி செய்யின் முன்னேற்றம் தாராளமாகக் கிடைக்கும், பணவிவகாரம் திருப்தியைக் கொடுக்கும்

மிதுனம்: நிதியில் முடக்கம் ஏற்படும், சிலர் வீண்பழிக்கும் இலக்காவர்கள், விஷமிகளின் தொல்லைகள் அதிகரிக்கும், பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்படலாம்.

கடகம்: நிச்சயமற்ற நிலையால் வேதனைப்படுவீர்கள், எதிர்பார்த்த பொருள்வரவு இன்றுதடைப்படலாம், இனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

சிங்கம்: மனம் நிறைந்த வாழ்வு மக்களால் மகிழ்ச்சி இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும், உறவினர் உதவிக்கு ஓடியவருவார்கள்,

கன்னி: ஆணவப்போக்கு அடிசறுக்க வைக்கும், பின்னணியில் மோசடி வேலைகள் நடைபெறலாம், மேலதிகாரிகளின் கழுகுப்பார்வை உங்களை வட்டமிடலாம், முன்யோசனை நன்று.

துலாம்: வாகன விருத்தி உண்டு, இல்லத்தில் திருப்தி காணும், மோகனவாழ்வு கிட்டும், தாய்வழியால் தனலாபம் வந்துசேரும், முதியவர் ஆசியும் உண்டு.

விருச்சிகம்: புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும், புத்திரர்களால் புகழும் கிடைக்கும், இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும்

தனுசு: வாய்வுக் கோளாறினால் வேதனைப்படுவீர்கள். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். எதிரிகளின் கோளைத்தனமான நடவடிக்கைகள் உங்கள் அமைதியைக் குலைக்கும்.

மகரம்: திறமையான சம்பவங்கள் இடம்பெறும். வாழ்க்கையில் பசுமைதோன்றும் களன்திரவழியால் இலாபம் கிடைக்கும். காதலர்களுக்கு மனக்குஷியான நாள்.

கும்பம்: எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். நண்பர்கள்மூலம்நஷ்டமடைய இடமுண்டு. கூட்டுவியாபாரத்தில் மோசடி நடக்கலாம். சிந்தித்தபின் செயலாற்றவும்-

மீனம்; நினைத்தது நடக்கும். இனசனங்களின் கொண்டாட்டமும் உண்டு. பிதாவழிமூலம் எதிர்பாராத பொருள் வரவிற்கும் இடமுண்டு. பெரியோர் ஆதரவும் கிடைக்கும்.

## குடும்ப அட்டைக்கே இனிஅரிசி

(யாழ்ப்பாணம்)

பிரதேச நெற்சந்தைப் படுத்தும் சபை இன்றுமுதல் பாவனையாளர்களுக்கு பட்டுப்படுத்தப்பட்ட அளவிலே குடும்ப அட்டைகளுக்கு மட்டுமே அரிசி விற்பனையை நடாத்தும் இத் திட்டத்தை அமுல்படுத்தும் விளம்பரங்கள் சகல சில்லறை அரிசி விற்பனை நிலையங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

புதிய திட்டப்படி அரிசி கொள்முதல் செய்வோர் தம்முடன் குடும்ப அட்டையை எடுத்துச் செல்லவேண்டும். ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் கிழமைக்கு இரண்டு தடவை பத்து கிலோ அரிசி வழங்கப்படும்.

## காணி உறுதிகள் வழங்கப்படும்

(வவனியா)

ஊஞ்சல்கட்டி கிராமசேவைகர் பிரிவினுள் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட காணிகளுக்கான உறுதிப்பத்திரம் வழங்கும் வைபவம் நாளை வவனியா வடக்கு நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் பாலசுந்தரம் தலைமையில் ஊஞ்சல் கட்டி கிராமசேவகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதற்குப் பிரதம அதிதியாக வவனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. பி.சிறிசேன கலந்து கொள்வார். (இ)

## நீண்டநாளாக இருள்

(சித்தான்கேணி)

வட்டுக்கோட்டைக் கிராம சபை எல்லைக்குட்பட்ட தெருவீதிகளிலுள்ள அநேக தெரு விளக்குகள் நீண்டநாட்களாக உறங்கி வருகின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இத்தாலி பூகம்பத்துக்கு 1000 பேர் பலி! மலைக்கிராமம் ஒன்று முற்றாக அழிந்தது!!

## இரவு 80 தடவைகள் நில அதிர்ச்சி

ரோம், நவ. 25

தென் இத்தாலியை சின்னாபின்னப்படுத்திய பயங்கரப் பூகம்பத்திற்கு ஆயிரம் பேர் பலியாகினர் என இடபோது அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பூகம்பத்தினால் ஒரு மலைக்கிராமமே முற்றாக அழிந்துவிட்டதாகவும் அங்கு 80 வீதமான கட்டிடங்கள் தரைமட்டமாகியுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிறன்று இரவு ஏற்பட்ட இப்பூகம்பத்தை அடுத்து மறுநாள்வரை 80 தடவைகள் அங்கு நில அதிர்வுகள் ஏற்பட்டன என்றும் மீட்புப் பணிகள் இங்கு போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### கருணாநிதி கண்டனம்

சென்னை, நவ. 25

தென்னாற்காடு மாவட்டத்தில் மெப்பாட்டம்பாக்கம் கிராமத்தில் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டது சமீபத்தில் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் விவசாயிகளுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறுவதாகுமென்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கண்டித்துள்ளார்.

இரண்டு, மூன்று நாட்கள் தவணை பெற்ற விவசாயிகளின் மின்னிணைப்புத் துண்டிக்கப்பட்டது கண்டிக்கப்படத்தக்கதாகுமென்று திரு. மு. கருணாநிதி இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் கண்டித்துள்ளார். (வெ)

காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிவரை...

### கால் நடையாகச் செல்கிறார்

சென்னை, நவ. 29

காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிவரை கால் நடையாகச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ள 62 வயதுடைய ஜனாப் நபீக் என்ற நபர் திருச்சிராப்பள்ளி வந்தபோது அவருக்குச் சிறந்த வரவேற்பளிக்கப்பட்டது.

தாம் நடப்பதற்குத் திட்டமிட்டுள்ள 6,835 கிலோ மீட்டர் தூரத்தில் இதுவரை 5,90.6 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்துவிட்டதாகவும் கிறிஸ்மஸ் தினத்துக்கு முன்னர் தம்மால் கன்னியாகுமரிக்குச் செல்லமுடியுமென்றும் ஜனாப் நபீக் தெரிவித்துள்ளார். (இ)

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய

### இந்தியத் தமிழரின் நிலை: இந்திராவை சந்திக்க குழு

சென்னை, நவ. 25

இலங்கையிலிருந்து இந்தியா திரும்பியுள்ள இந்திய வம்சாவளியினர் தமது எதிர்காலம் குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

இவர்களை எதிர்நோக்கியுள்ள வேலைவாய்ப்பு, குடியேற்றம் ஆகிய பிரச்னைகள் குறித்து விசேட ஆ...க்குழு ஒன்று திருமதி காந்தியுடன் விரைவில் பேச்சு நடத்துவதற்கென நியமிக்கப்பட்டுள்ளது.

உலகத்தமிழ் பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு தமிழ் மன்னன் தலைமையிலான ஒரு குழுவே திருமதி காந்தியைச் சந்திக்க இருக்கிறது. (இ)

### இடைத் தேர்தலில் 3மாநிலமுதல்வர்கள்வெற்றி

புதுடில்லி, நவ. 25

இந்தியாவின் ஏழு மாநில சட்டசபைகளில் நடைபெற்ற 15 தொகுதிகளுக்கான சட்டசபைத் தேர்தலில் ஒரிஸ்ஸா, மகாராஷ்டிரம், ராஜஸ்தான் ஆகிய மாநில முதல்வர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

மகாராஷ்டிர முதல்வர் திரு. ஏ. ஆர். அந்துலே, ஒரிஸ்ஸா முதல்வர் திரு, ரி. பி. பட்நாயக், ராஜஸ்தான் முதல்வர் திரு. ஜெகநாத் பஹாடியா ஆகிய மூவருமே இந்த இடைத் தேர்தலில் வெற்றிபெற்றனர். இம்மூவரும் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்தவர்கள். (இ)

மதுரையில்

### கலை எழுச்சி மன்றம் எடுக்கும் விழா

(வேலணை)

கலை எழுச்சிமன்றம், தமிழ் இலக்கிய சுதம்ப நிகழ்ச்சியையும் இனமுழக்க இலக்கிய மலரின் அறிமுக விழாவினையும் மதுரையிலும், சென்னையிலும் நடத்தவிருக்கின்றது.

மதுரையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் பிறபே இம் மகாநாட்டை நடாத்துவதற்கு ஏ. எஸ். மனுவல்தம்பி ஏற்பாடுகள் செய்துவருகின்றார்.

முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் கலைஞர் கருணாநிதி உட்பட பல பேராசிரியர்களும் கலந்துகொண்டு உரையாற்றவிருகின்றனர். (ஈ)

### முடிச்சுமாறிகளின்தொல்லை: ரயிலில் 'சிவில் பொலிஸ்'

#### பிரதி பொலிஸ் மாஅதிபர் தகவல்

(வவனியா)

கொழும்பிலிருந்து வவனியாவிற்கு வரும் ரஜரட்ட ரஜனி புகைவண்டியில் இரவு வேளைகளில் அண்மைக் காலங்களில் அதிகமாக நடைபெற்றுவரும் முடிச்சுமாறிகளின் தொல்லைகளைக் குறைப்பதற்காக, மதவாச்சியிலிருந்து வவனியாவரையும் சாதாரண உடையணிந்த பொலிசாரை கடமையில் ஈடுபடுத்துமாறு வவனியா பொலிஸ் அத்தியட்சகருக்கு தாம் பணித்துள்ளதாக வட பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. பி. மகேந்திரன் தெரிவித்தார்.

வவனியா பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற மாதாந்தக் கருத்தரங்கிற்கு வருகை தந்திருந்தபோதே திரு. பி. மகேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் வவனியா பொலிஸ் அத்தியட்சகர் திரு. சி. பி. ஜயசூரிய- உதவி அதிபர்கள் திரு, சந்திரா ஜயவர்த்தன, திரு. ஸ்ரான்லி ரணசிங்க ஆகியோரும், தலைமன்னார், மன்னார், முல்லைத்தீவு, முருங்கன், மாங்குளம், கிளிநொச்சி, பூநகரி ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும், மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

வடபகுதி பாடசாலைகளில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு தம்மையும், தமது உடைமைகளையும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றிய விளக்கமான நடைமுறைச் செய்கைகளின்மூலம் பொலிசார் பாடசாலைகளுக்குச் சென்று போதிக்கவுள்ளார்கள். வீதி ஒழுங்கு, சாதாரண வாகனங்களைச் செலுத்தும் பொழுது விதிகளில் கடைப்பிடிகக வேண்டிய முக்கிய விதிமுறைகள், நடைமுறை வாழ்க்கையில் பொதுவாக அறிந்திருக்க வேண்டிய முக்கிய விதிமுறைகள், சட்ட ஒழுங்கு விதிகள் பற்றியும் பிள்ளைகளுக்குப் பொலிசார் போதிக்கவுள்ளார்கள்.

சிறிய முறைப்பாடுகளை பொலிசார் இயன்றளவு தாமாகவே தீர்த்துவருகின்றனர். ஆனால் காணி சம்பந்தமான முறைப்பாடுகளைத் தீர்க்கும் பொழுது பொதுமக்களுக்கு அதிருப்தி ஏற்படும்பட்சத்தில் அவைகளை உடனடியாக 24 மணித்தியாலங்களுக்குள் வழக்குத் தாக்கல்செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் வவனியா மாவட்டத்தில் நடைபெற்ற வாகனக் கொள்ளைகளையும், நெடுங்கேணியில் இடம்பெற்ற கோஷ்டிக் கொள்ளையையும், மற்றும் கொலை, கொள்ளை, வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளே செய்திருப்பதாகவும் அவர்களை மடக்கிப்பிடிப்பதற்காக பொலிசாருடன் பொதுமக்கள் கூடிய அளவில் ஒத்துழைப்பதினாலேயே குற்றவாளிகளைத்தாமதமின்றிகைதுசெய்யக்கூடியதாக இருந்தது என்றும் கூறினார்.

### குடத்தனை அபிவிருத்திக்கு 'உலகமிஷன்' உதவி

(புலோலி)

வடமராட்சிப்பகுதியின் பின் தங்கிய கிராமமான குடத்தனைக் கிராமத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை உலக விஷன் ஸ்தாபனம் மேற்கொண்டுவருகிறது.

குடத்தனை மாதர் சங்கத் தலைவி செல்வி யோ ஸ்வரி முருகேசு இந்நிறுவனத்தினால் இக்கிராம அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியைப் பன்முகப்படுத்தி, நல்லின ஆடுகள், கோழிக்குஞ்சுகள் என்பனவற்றை தவணைக்கடன் அடிப்படையில் வழங்கிவருகிறார்.

மேலும் நல்லின தென்னங்கன்றுகளும், பழமரங்களும் இங்கு வழங்கப்படவுள்ளன. வடமராட்சி வடக்கு கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் கண்காணிப்பில் இவை நடைபெற்றுவருகின்றன. (ஈ)

### புதிய உரக்களஞ்சியம்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதி விவசாயிகளின் நன்மை கருதி அம்பன் கமநலச்சேவை நிலையத்தில் புதிய உரக்களஞ்சியம் இருபத்தையாயிரம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை அம்பன் கமநலச்சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பீதாம்பரம் நாட்டி வைத்தார்.

இவ்வுரக் களஞ்சியத்தை மிகத்துரித கெதியில் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

### சேமிப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது எல்லைக்குட்பட்ட மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு சேமிப்புத் திட்டமொன்றை கிராமிய வங்கியின் அனுசரணையுடன் செயல்படுத்தியுள்ளது

இத்திட்டத்தை சங்கம் தனது இருபது சில்லறை டிப்போக்களிலும் அமுல்படுத்தியுள்ளது ஒவ்வொரு அங்கத்தவர்களும் மாதாந்தம் இத்திட்டத்தில் பத்து ரூபாயை சேமிப்பில் இட்டால், சேமிப்பு முதிர்வடையும் காலமான 30 மாதங்களின் பின்னர் வட்டியுடன் கூடிய தொகையாக முன்னூற்றி ஐம்பது ரூபாவைப் பெறமுடியும்.

இதனைவிட சேமிப்பை ஊக்குவிக்குமுகமாக நடைபெறும் பரிசுத்திட்டத்தில் 75 அதிர்ஷ்டசாலிகளுக்கு 100 ரூபா வீதம் சன்மானம் வழங்கவும் தீர்மானித்துள்ளது. (இ)

### விற்பனை நிலையம் மூடப்பட்டது

(சித்தன்கேணி)

காரைநகர் சீ-நோர் நிறுவனம் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திற்கு முன்பாக நடாத்தி வந்த விற்பனை நிலையத்தை மூடி விட்டது இந்த விற்பனை நிலையத்தில் மீன், மீன்பிடிவலைகள் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

இந் நிலையத்தை மூடப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. (அ)

## தகுதியற்ற நியமனமும் ஆசிரியர் பற்றாக்குறையும்

### கல்வி பாதிப்புக்கு மானிப்பாய் எம். பி. கூறும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"தகுதியற்ற ஆசிரியர் நியமனத்தாலும், ஆசிரியர் பற்றாக்குறையினாலும்தான் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளதுஎன மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தேநீர் விருந்து வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

அழகரத்தினம் மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம விருந்தினர்களாகக் கல்வி அதிகாரி திரு. கே. நவரத்தினம், மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. தனஞ்சயன், வடபிராந்திய மனையியல் பரிசோதகர் திருமதி ருக்குமணி சுந்தரதாஸ் முன்னாள் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. க. முத்துவேற்பிள்ளை, மெமோறியல் கல்லூரி அதிபர் திரு. சுந்தரதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. வி. தர்மலிங்கம் எம். பி. மேலும் கூறியதாவது: "ஆசிரியர் பற்றாக்குறை, தகுதியற்ற ஆசிரியர் நியமனம், தளபாடப்பற்றாக்குறை ஆகியன இங்கு மட்டுமல்ல இலங்கையின் சகல பாகங்களிலும் இருக்கின்றன. வட பகுதியில் இந்நிலை கூடுதலாக உள்ளது.

'ஆசிரியர்களின் அக்கறை இன்மையால்த்தான் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது எனப் பெற்றோர்களும் மாணவர்களும் குறைப்படுகிறார்கள். ஆசிரியர்களின் அக்கறையால் மட்டும் மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டுவிடாது. பெற்றோர், மாணவர் அனைவரும் கல்வியில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

'ஆங்கிலம் தெரியாத ஒரு ஆசிரியரை ஆங்கிலம் கற்பிக்கும்படி கூறினால் அவரால் என்ன செய்யமுடியும், அவர் ஏதோ தனக்குத் தெரிந்த எதையாவது பாடமாக்கிவிட்டு வந்து தான் கற்றதை அப்படியே மாணவர்களிடம் ஒப்பித்துவிட்டுச் செல்கிறார். இந்த நிலை இருக்கும்வரை மாணவர்கள் கல்வியில் முன்னேறமுடியாது. செல்வாக்குள்ளவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதனால்தான் இந்த நிலை ஏற்பட்டது. இனிமேலாவது இந்த நிலைமாற வேண்டும் ஆசிரியர் நியமனம் செய்யப்படும்போது ஒவ்வொரு பாடத்திற்கும் தகுதியானவர்களை நியமிக்கவேண்டும் அப்போதுதான் ஆசிரியர் கூச்ச ... ... முடியும். (கொ-அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

> **மணிவாசகம்**
> சற்குருவைத் தரிசிப்பதற்கு உன்னில் தீவிர தாகம் ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் அவர் தரிசனம் கிடைக்கும்.
> —சுவாமி சிவானந்தா

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சதுரங்க கழகத்தின் பரிசளிப்பு விழாவும், பொதுக் கூட்டமும் இம்மாதம் 30 ம் திகதி மாலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறுகிறது.

யாழ்; இந்துக் கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார். (க)

## நமது நோக்கு

### வெற்றிகரமான வைபவம்

சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாண திறந்தவெளியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தை நாம் ஓர் அரசியல் நாடகம் என்று அதற்கு முன்னராகவே குறிப்பிட்டிருந்தோம்.

இன்று அதனை ஒரு வெற்றிகரமான வைபவம் என்று வர்ணிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த நாட்டில் நடைபெறும் அரசியல் கூட்டம் எதுவும் நாடகமே! அது அவ்வாறு இருப்பதும் இயல்பு ஆனால் நாடகம் நன்றாகவிருக்கவேண்டும்,

நாம் குறிப்பிட்ட நாடகம் நாட்டின் வரலாற்றில் தக்க இடம்பெறும்.

யாழ்ப்பாண நகரத்தில் என்றும் காணாத சனசமுத்திரம் அன்று அலைமோதியது. எள்ளுப்போட இடமில்லாது மக்கள் குழுமியிருந்தனர். ஒழுங்கும் அமைதியும் நாட்டுக்கே முன்மாதிரியாக அமைந்தன கூட்ட ஒழுங்குக்குப் பொறுப்பானவர்களை எல்லோரும் பாராட்டினர்.

இவையெல்லாம் வைபவத்தின் மேல்தோற்றமே! உள்ளுடன்தான் மிகமுக்கியமானது. சுமார் இருபதினாயிரம் மக்கள் அங்கு ஏன் பல கஷ்டங்கள் மத்தியில் வந்து கூதற்சாய்ந்தனர்?

எமது கேள்வியில் தப்பு உண்டு என்பதை உணர்கிறோம். கஷ்டங்களே காரணமாயிருப்பதை நாம் மறந்துவிட்டோம்.

மக்கள், சிறப்பாகத் தமிழ் மக்கள் படும் கஷ்டங்கள் இன்று நேற்றுத் தொடங்கவில்லை. இந்த ஆட்சியில் அவை அதிகரித்தாலும், 1956-ம் ஆண்டு 'சிங்களம் மட்டும்' என்ற அநியாயச் சட்டம் இந்த நாட்டு மக்களையே அலைத்து வருகின்றது.

தமிழ் மக்களை நேரடியாகத் தாக்குவதால் அவர்கள் அதனைத் தொடக்கத்திலேயே காண, உணரமுடிந்தது. அதனால் நாடு பிளவுபட்டது. சிறந்த தமிழ்த் திறமைசாலிகள் நாட்டைவிட்டு வெளியேறினர், அந்தச் சட்டத்தின் தீவிரவாதத்தால் சிங்கள நிபுணர்கள் விரக்தியடைந்து வாளாவிருக்கின்றனர். இந்தச்சட்டத்தை சிங்கள மக்கள் பெயரால் ஆட்சியாளர் தொடர்ந்து கடைப்பிடிப்பதால், நாட்டின் அரசியல் நிர்வாகம், திறமையற்ற மோசடிக்குள்ளான நிலைமையில் இயங்கிவருகிறது. இதனைப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் உணருங்காலம் இன்னும் வந்தபாடில்லை.

சர்வஜன வாக்குரிமை கிடைத்ததும், அதற்கு 17 வருடங்களுக்குப்பின் சுதந்திரம் கிடைத்ததும், அதனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசுகள், நாட்டின் பெருமைவாய்ந்த தேசிய இனமாகிய தமிழர்களை அரசியலில் ஏமாற்றி வந்ததும், தங்களின் அரசியல் சாசனம், முறையே சிறிலங்கா ஜனநாயக குடியரசுக் குரியதென்றும், இன்று அதனை சிறிலங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசென்றும் ஓலமிட்டுவருவதை தமிழ் மக்கள் நன்கறியர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் அந்த நாடகத்தில் கதாநாயகியாகத் திகழ்ந்தவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா. அவர் உட்பட அங்கு வீற்றிருந்த ஐந்து கட்சித் தலைவர்கள் பஞ்சபாண்டவர்கள் ஒற்றுமைப்பட்ட அடிப்படை, நாம் குறிப்பிட்ட பின்னணியில் கூர்ந்து சிந்திக்கவேண்டியது. அந்த அடிப்படை என்ன?

அநீதியை, அதர்மத்தை எதிர்த்துப் போராடுவதே! அது எங்கு நிகழ்ந்தாலும், யாருக்கு நிகழ்ந்தாலும் அதனை எதிர்த்துப் போராடுவது தமிழ்மக்களின் தனிப் பண்பு என்ற காரணத்தால் அவ்வித பெருங்கூட்டம் எவ்வித குழப்பமுமின்றி நடைபெற்றது.

தமிழ் மக்களின், யாழ்ப்பாண மக்களின் தனிப்பண்பென்பதை நாம் வற்புறுத்துவதற்குக் காரணமில்லாமலில்லை.

சிறிமாவோ அம்மையாரோ அவருடைய கணவரோ, நாட்டின் பெருந்தலைவர்களாயிருந்தும், யாழ்ப்பாண மக்களின், தமிழ்மக்களின் மனப்பூர்வமான ஆதரவு பெற்றவர்களல்லர். சிறப்பாக அம்மையாரின் ஆட்சியில் சில நன்மைகள் கிடைத்த போதும் தமிழ்மக்கள்பட்ட கஷ்டங்கள் பல,

பிரதமராக அவர் விஜயஞ்செய்தபோது, இன்று மக்கள் காட்டிய அனுதாபம், அன்று காட்டியதில்லை. ஒரு நாட்டின் பிரதமராயிருந்து, உலகின் முதற் பெண் பிரதமராயிருந்து பிரசித்தம்பெற்ற ஒருவர், நிராயுதபாணியாகவும், நிரபராதியாகவும் எங்கள்முன் வந்ததே, எங்கள் அனுதாபத்தையும் உதவியையும் நாடியதே அந்தத் தனித்துவமான கூட்டத்தின் இரகசியம்,

எங்கள் மத்தியிலும் அப்பெருங்கூட்டத்தைக்குழப்பி விடப் பலர் விரும்பியிருக்கலாம். அம்மையாரைச் சேர்ந்தகட்சியினரைத் தவிர வேறு யாவர் அதனைத் தடுக்கமுடியும்? பஞ்சபாண்டவர்களிற் சிறந்த தர்மர் சொல்லைத்தான் மற்றையவர்கள் நம்பி வாழ்ந்தனர்.

தர்மம் தலைகாக்கும் என்ற வாக்கியத்தை நம்பி வாழுந் தமிழர்கள், தமிழ் வாலிபர்கள் அந்தக் கோட்பாட்டைப் பாதுகாக்க ஏற்படுத்திய வைபவம் என்று கருதி அங்கு குவிந்தனர், பேச்சுக்களைப் பொறுமையுடன் செவிசாய்த்தனர். பண்பாட்டை நிலைநாட்டினர்.

தமிழ்மக்களின் இலட்சியம் தமிழ் ஈழமென்றும், சுதந்திரக்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமென்றும், இடதுசாரிக்கட்சிகள் ஆட்சி அவசியமாகவும், அவசரமாகவும் மாற்றவேண்டுமென்றும் தனித்து உணரிய போதும் இன்றைய ஆட்சியின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிப்பது பொது நோக்காயிருந்தது மக்களின் நெஞ்சை உருக்கியது.

# மீனில்ஃபோமலின் குருநகர் மீனவருக்குச் சம்பந்தமில்லை

மீன்கள் கெடாமலிருபதற்காகமனித சடலங்களுக்கு ஏற்றப்படும் ஃபோமலின் மருந்தை மீன்களுக்கு ஏற்றி விற்பனை செய்யப்படுவது பற்றி 17-11-80 அன்று 'ஈழநாடு' நாளேட்டில் வெளியான கட்டுரை தொடர்பாக வண. பிதா ஸ்ரனிஸ்லாஸ் கடுமையாக ஆட்சேபனைத் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக வண. பிதா வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையின் முக்கிய பகுதிகளை மக்கள் கருத்தாக இங்கே பிரசுரிக்கிறோம். (ஆ-ர்)

## வண. பிதா எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ்

(சமூக ஊழியர்)

## மக்கள் கருத்து

சாவகச்சேரிச் சந்தையில் ஃபோமலின் ஏற்றப்பட்ட மீன்கள் விற்பனைக்கு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்ட சம்பவத்தை கரையூர் இறங்குதுறையில் இறக்கப்பட்டு விற்கப்படும் மீன்களுடன் சம்பந்தப்படுவற்கு எதுவித ஆதாரமுமில்லை. அப்படியான மீன்களை வாங்கியதாகக்கூறியுள்ள கட்டுரையாளர் உரிய அதிகாரிகள் மூலம் ஏன் நடவடிக்கை எடுக்கத்தவறினர்?

ஃபோமலின் ஏற்றப்பெற்ற மீன்கள் பற்றிய செய்தி கட்டுரை தலையங்கம் ஆகியவை இதனால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள்பற்றி அழுத்திக் கூறுவதினாலும் உணவு உற்பத்தியைப் பெருக்க கடற்றொழில் அமைச்சர் எடுக்கும் முயற்சிகளை இது பாதிக்கும் என்பதினாலும் ஏற்கனவே எண்ணெய் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை மீனவர்கள் மேலும் கடும்பாதிப்புக்குள்ளாவார்கள் என்பதினாலும் இது விடயமாக எனது தலைமையில் ஒரு குழு விபரமாக ஆராய்ந்து சாவகச்சேரி மாநகர ஆணையாளரை நாம்சந்தித்துப் பேசினோம். செய்தி அறிக்கை உண்மை என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். மீனின் தொகைதான் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மீன் கிழக்குப்பகுதியிலிருந்து வந்துள்ளது. நஞ்சேறிய மீன் அவ்வளவும் சுகாதார அதிகாரியின் உத்தரவின்பேரில் புதைக்கப்பட்டது. இங்கு மீன்கள் பல இடங்களிலிருந்தும் வருகின்றன. நஞ்சூட்டப்பட்ட மீன்களைக் கண்டுபிடித்த சுகாதார பரிசோதகரால் குற்றவாளிகளை அடையாளம் காண முடியவில்லை. அவர்களின் முகவரிகளையும் அவர் குறித்துக் கொள்ளவில்லை. சாதாரண நிலையில் இம்மாதிரிக் குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டனைக்குட்படுத்தப்பட்டு சுகாதார அதிகாரியின் உறுதிப்பாட்டின் மீது பொலிசிலும் முறைப்பாடு பதியப்பட்டிருக்கும். பொது அதிகாரி தவறுவாரானால் சாவகச்சேரி சுகாதாரப் பரிசோதகர் சட்ட நடவடிக்கை எடுக்கும்படி பணிக்கப்பட்டிருப்பார். ஆனால் இந்த நடைமுறை எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை. இந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணையாளர் உறுதியளித்தார். மேலும் வதந்திகளால் கரையூரிலிருந்து வரும் மீன்களுக்குத் தடை விதிக்கப்படவில்லை யென்பதையும் ஆணையாளர் உறுதிப்படுத்தினர்.

மீனவர்களுக்கு ஃபோமலின் ஏற்றும் வியாதி எல்லா மீனவர்களுக்கும் ஏற்பட்டுவிட்டது என்றும் மீன்பிடிக்கச் செல்கையில் தமது வள்ளங்களில் மீனவர்கள் உண்மையில் ஃபோமலினைக் கொண்டு செல்கிறார்கள் என்றும் விடியற்காலை 2 மணியளவில் மீன்கள் பிடிக்கப்படுவதால் மீன்கள் அழுகாமலிருப்பதற்காகக்கடல் நீருடன் ஃபோமலினைக்கலக்கிறார்கள் என்றும் கட்டுரையாளர் எழுதியுள்ளார்.

மேலும் நைலோன் வலையினால் பிடிக்கப்படும் மீன்களுக்கும் ஏனைய வலைகளினால் பிடிக்கப்படும்மீன்களுக்கும்வித்தியாசம் ஏற்படுத்தும் கட்டுரையாளர் இந்த மீன்கள் விரைவில் அழுகிவிடுவதால் ஃபோமலின் பாவிக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதைவிளங்கிக்கொள்ள முடியாமலிக்கிறது. இது பொதுவாக நிலவும் ஒரு கருத்தின் அடிப்படையாக எழுந்திருக்கலாம்.

### கட்டுரையாளர் நோக்கம்

சாவகச்சேரியில் நடந்த சம்பவத்தைக் கரையூர் இறங்குதுறையுடன் இணைத்து இந்தச் சம்பவத்துக்கு கரையூர் தான் மூலஸ்தானம் என்று சாட்டுவதற்குக் கட்டுரையாளர் முயன்றிருக்கிறார். இது சட்டவிரோதமானது. இந்தக் கட்டுரையில் காணப்படும் உண்மைக்குமாறான இரு குறிப்புக்களையே ஆசிரிய தலையங்கத்திலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

### யாழ். நகரில் இன்றுடன் முடிவடையும்

# புகைப்படக்கண்காட்சி

## ஸ்டீபன்பெல்ஸின்கைவண்ணம்

இயற்கையின் மாட்சிகள் நாளாந்தக் காட்சிகள் தொன்மையின் கோலங்கள் புதுமையின் தோற்றங்கள் உலகையே வலம் வந்தது போன்ற ஒரு பிரமை. இத்தனைக்கும் முன் உள்ளவைகள் அத்தனையும் வெறும் புகைப்படங்கள். வெறும் புகைப்படங்களை உயிரோவியங்களாகப் பேசும் திறன் அளித்த பெருமை 32 வயது நிரம்பிய இளம் புகைப்படக் கலைஞன் ஸ்டீபன் பெல்ஸ்க்கே உரியது. அப்பப்பா இப்படியும் ஒரு புகைப்படக் கலைஞனா? அத்தனையும் தத்ரூபங்கள். உலகம் போற்றும் இந்நிழற்படக் கலைப் பொக்கிஷத்தை யாழ். நகர மக்களும் கண்டு களிக்கும் சந்தர்ப்பத்தை நல்கிய அமெரிக்கத் தூதரகத்தினரை வாழ்த்தாத கலை நெஞ்சம் இருக்காது. யாழ். பொதுசன நூலக மேல் மண்டபத்தில் கலைத்தேனருவி கரைபுரண்டோடும் இக்கண்காட்சி திங்கள் முதல் இன்று புதன் வரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சீறும் இந்துமாக்கடலின் ஒரு கூறும் திருமலைக்கடல் மேல் இடும் படகின் காட்சி- எழில் கொஞ்சு திருமலையின் அலைகொஞ்சு சுவாமி மலைக் காட்சி - பரபரக்கும் காலி வீதிப்படம் - கண் கவரும் கண்டி ஏரிக்கரை - நீர்கொழும்பின் நாளாந்தத் தோற்றம் - பதுளை வவுனியாவின் புகைவண்டிப்படம் - சிகிரியாச் சித்திரம் - கொட்டியாரக் குடா அநுராதபுரத்து ஆனைக் குளியல் நுவரெலியா பருத் தோட்டத் தேயிலைக் காட்சி கண்டி பஸ் நிலையம் என எத்தனையோ இலங்கைப் புகைப்படங்கள் அத்தனையும் பார்ப்பவரை அந்த அந்த இடத்திற்கே இழுத்துச் சென்று வருகின்றன. ஸ்டீபன் பெல்ஸ் இலங்கைக்கு மூன்று தடவை வந்துள்ளார். காட்சியில் காணப்படும் இலங்...

— பற்றிமாகரன் —

(5-ம் பக்கம்பார்க்க)

### இன்று நினைவுதினம்

## தத்துவஞானி கைலாசபதி

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை அலங்கரித்து அவ்விடமறைந்து தலை சிறந்த ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் உலகுக்கு உதவிய மும்மூர்த்திகளுள் முக்கியமானவர் பொ. கைலாசபதி அவர்கள். இவர் சிறந்த சிந்தனையாளர்- சுகநோக்கர். மனிதத்துவமடைந்தவர்களில் மிகையன்று.

ஏனைய இருவர் அதிபர் சி. சுவாமிநாதன் அவர்களும் இன்றைய இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுமே. இவரிடம் மேலான தத்துவங்களைக் கற்றனர் என்றால் எம்போன்றோரைப்போன்ற [illegible] பெற்றது எப்படி?

'யார்' என்று ரமணரிஷி கேட்டது போல, தத்துவ ஞானிகள் ஒருகேள்வி போட்டு ஞான உதயத்தைச் சிஷ்யகோடிகளிடம் சிருஷ்டிப்பர்? ஓர் உதாரணம் கூறுதும்.

-சிலருக்கு நன்மை செய்ய விருப்பம் உண்டு. ஆனால் நன்மை செய்யத் தெரியுமா!' என்பதுதான் கேள்வி.

இவ்வினா எத்தனை கிளைகளை ஒரே நேரத்தில் விடுகின்றன? சிந்தித்துப் பார்த்தால் முடிவேது?

இப்படியான அவர் போதனைகளை இன்னுவது நாம் சிந்தித்து சிறிது நல்வழி காண்போமாக!

--ஆர். ரி. எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிரியனுக பத்திரிகைகள் விளங்க வேண்டும்

## கருத்தரங்கில் கைலாசபதி

(அரியாலை)

''பத்திரிகைகள் நாட்டின் காவலனியாகவும் மக்களின் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வெளிப்படுத்தும் தளமாகவும் நல்ல கருத்துக்களை எடுத்துக்கூறும் போதனுசிரியராகவும் விளங்க வேண்டும் இன்று அநேக பத்திரிகைகள் அளவுக்கதிகமான வியாபார நோக்குடன் பத்திரிகா தர்மத்தைக் காலத்துக்காலம் மீறி முக்கியமற்ற விடயங்களுக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவத்தைக் கொடுப்பதுடன் முக்கியமான விடயங்களுக்கு இடத்தைக் கொடுக்காமல் விடுகின்றன. சில பத்திரிகைகள் மக்கள் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பழக்கம் நாளாந்தம் குறைவடைந்து வருகிறது. இதுமிகவும் வருத்தத்தக்க செயலாகும்''

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதி பத்திரிகை எழுத்தாளர் கருத்தரங்கில் ''பத்திரிகா தர்மம்'' என்ற விஷயம் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மண்டபத்தில் இலங்கை கலை இலக்கிய ஒன்றியத் தலைவரும் யாழ் பல்கலைக்கழகத்தமிழ் விரிவுரையாளருமான திரு. நா. சுப்பிரமணியஐயர் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பேராசிரியர் கைலாசபதி தொடர்ந்து பேசுகையில் பத்திரிகைக்கு எழுதும் எழுத்தாளன் விஷயத்தை ஆராய்ந்து எழுதும் எழுத்தாளர் அவசர அவசரமாக எழுதும் எழுத்தாளன் என இருவகையிலடக்கலாம் இன்று பத்திரிகையில் வெளிவரும் செய்திகள் சமுதாயப்பிரச்சனைகளை முன்வைத்து செய்திகளை வெளியிடுகின்றனவா? முக்கியமற்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றனவா? வியாபார நோக்கோடு வெளியிடப்படுகின்றனவா? என்பவற்றை நாம் ஆராய்வீதால் இவைகளில் பத்திரிகைகளின் ஏக போக உரிமைகள் வெளியாகின்றன. தனிஒருவனுக்குத் தர்மத்தைப் போதிப்பது சுலபம் ஆனல் ஸ்தாபன ரீதியில் அதனைக் கடைப்பிடிப்பது கஷடமாகும் பத்திரிகா தர்மம் நாட்டின் அரசியலமைப்பையும் பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டு நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது கருத்துச சுதந்திரத்திலும் பார்க்க நாடுதான் முக்கியம் என்று கருதும் சோஷலிஷ நாடுகளில் பாரிய வன்செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. கருத்துச் சுதந்திரம் தான் முக்கியம் என்று கருதும் அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளில் பாரியவன்செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன, இதனைவிட ரெலிவிஷன் போன்ற செய்தித் தொடர்பு சாதனத்திலும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. நாட்டுக்கு நாடு பத்திரிகா தர்மம் தேறுபட்ட பொருளைக் கொடுப்பனவாக அமைகிறது அடக்குமுறைகளை நாடு தொடக்கம் தனிமனிதன் வரை குழுக்கள் வரை எதிர்த்துக்காட்டும் போராட்டமே பத்திரிகா தர்மமாக அமைகிறது என்று குறிப்பிட்டார்.

### தர்மமும் கட்டுப்பாடும்

யாழ். ரோட்டரிக்கழகத்தலைவரும் சட்டத்தரணியுமான திரு. ஆர் பாலசுப்பிரமணியம் ''பத்திரிகைச்சுதந்திரமும் நீதித்துறையும்'' என்பது பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது பத்திரிகைகள் படைக்கும் காக்கும் அழிக்கும் இயல்புகளையுடையன இதனுல் தான் காலத்துக்காலம் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள பத்திரிகைகளின் மேல் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவருகின்றன. தர்மத்தைக்காக்க சுதந்திரம் வேண்டும். ஆனல் தர்மத்தை மீறும் பொழுது கட்டுப்பாடு அவசியமாகும். தார்மீக ஆட்சி நிலவுகிறது என்று சொல்லப்படும் இந்த நாட்டில் சரியான நீதித்துறை இல்லை. நாட்டிலுள்ள நீதிபதிகள் சட்டத்தை அமுலாக்கலாமே தவிர நீதித்துறையில் நின்று செயல்பட முடியாது. இன்று நம் நாட்டில்இருப்பதுநீதித்துறையல்ல. சட்டத்துறையே யாகும். நீதியைக் கடைப்பிடிப்பவர்கள் சட்டத்தை ஆக்கலாம். ஆனல் நம்நாட்டில் கைதூக்குகிறவர்களைக் கொண்டே சட்டமாக்கப்படுகிறது நம்நாட்டிலுள்ள அரசியலமைப்புச் சட்டத்தில் ஒன்றுக்கொன்று வெவ்வேறு கருத்துக்களைக் கொடுக்கும் சரத்துக்கள் இருக்கின்றன

யாழ். மாவட்ட சமூக சேவைப் பணிப்பாளர் திரு. கெ. கெங்காதரன் ''சமூகப் பணிகளும் பத்திரிகைகளும்'' பற்றிப் பேசுகையில் ''சமூகத் தொண்டுக்கு உதவும் செய்திகளை காலத்துக்குக்காலம் வெளியிட்டு சிறந்த சேவைகளைப் பத்திரிகைகள் செய்து வருகின்றன. சமூக சேவை ஸ்தாபனம் இதுவரை தர்மப் பணம் கொடுக்கும் ஸ்தாபனமாகவே இருந்தது. இன்று அது அபிவிருத்தியோடு தொடர்புடைய ஸ்தாபனமாக சேவையாற்றுகிறது. வலது குறைந்தவர்களுக்கும் மனேநிலையில் குறைபாடுடைய வர்களுக்கும் பயிற்சி அளித்து அவர்களை தாமாகவே வாழும் நிலையை எமது ஸ்தாபனம் ஏற்படுத்தி வருகிறது. ரோட்டறி, லயன்ஸ் சழகங்களும், தனிப்பட்டவர்கள் பலரும் சமூக சேவைஸ்தாபனத்துடன் இணைந்தும் தாம் தனித்தும் பக்கஞும் உதவி வருகின்றனர்'' என்ருர்.

''அரசும் பத்திரிகையும்'' என்ற தலைப்பில் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. க. சிவஞானம் பேசுகையில் ''மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டுமானல் சமமான செய்திகளுக்கும் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நேர்மையையும் நீதியையும் நிலை நாட்டும் உரிமை பத்திரிகைகளுக்கு உண்டு இதனை நிலை நாட்டும் அளவில்தான் ஜனநாயக அரசு அமைகிறது. கடமைகளைச் செய்பவர்களை ஊக்குவித்து பிழைகளை காலத்துக்காலம் சுட்டிக்காட்டி பத்திரிகைகள் நடுநிலைமையாகச் செயல்பட வேண்டும்'' என்ருர்,

வைத்திய கலாநிதி ப. சோ. பாரதி, பண்டிட் கே. என். நவரத்தினம், யாழ். இந்துக் கல்லூரி முன்னுள் அதிபர் திரு. என். சபாரத்தினம், யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரை வழங்கினுர்கள். வவனியா எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. நா. தர்மராஜா (அகளங்கன்) வரவேற்புரை நிகழ்த்தினுர்.

(ஈ)

## மீனில்...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

ஃபோமலின் உபயோகிக்கப்பட்டதா இல்லையா என்பது எம வாதமல்ல. தமது வயிற்றுப் பாட்டுக்காக இரவிரவாக உழைக்கும் ஏழை மீனவர்களுக்கும் இந்த ஊழல்களுக்கும் சம்பந்தமில்லையென்பதே எமது கருத்து. மீனவர்கள் மீனைப் பிடித்து கடற்கரையில் இறக்கியவுடன் அவர்கள்வேலை முடிவடைந்து விடுகிறது.

### இவர்கள் இல்லை என்பதற்கு என்ன உத்தரவாதம்?

கரையூரில் பல மீன் முதலாளிகள் மீன்வாங்குகிருர்கள். இவர்களில பலர் வெளியூர்களிலிருந்து வருபவர்கள். நகரிலிருந்து வருபவர்கள் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் மீன் விற்பனையாளர்களாவர். ஃபோமலின் பாவிப்பில் இவர்களும் இறங்கவில்லையென்பதற்கு என்ன உத்தரவாதம்? இவர்கள் தாம் வாங்கும் மீனை விற்பதற்கும் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே தமது மீன் புதிதாக இருக்க வேண்டுமென்பதற்காக ஃபோமலின் பாவித்திருக்கலாமல்லவா? மீன் விலை குறைவாக இருப்பதால் முதல் நாள் மாலையிலேயே சிலர் மீனைவாங்கி விடுகிருர்கள். அடுத்த நாள் விற்பனைக்குச் செல்கையில் மீன் புதிதாக இருக்கவேண்டும் என்பதற்காக ஃபோமலின் பாவிப்பதற்கு இவர்களுக்கு ஆசை ஏற்படலாமல்லவா? எனவே இதில் குற்றவாளிகள் யார்? இதற்கான சாட்சியங்களை எந்தப் புறத்தில் தேடுவது? மேற்படிக்கட்டுரையிலிருந்து ஆராயாமலும் அறுதிச்சான்றுகளாகவும் இரு குறிப்புகளை எடுத்து சம்பந்தப்பட்ட ஆசிரியத் தலையங்கத்தில் பாவிக்கப்பட்டிருக்கின்றன. இது கவலைக்குரியது. இவை மீன்பிடி தொழிலையும் மீனவ சமூகத்தையும் பெரிதும் பாதித்துள்ளன. அத்துடன் கரையூரின் பெயருக்கும் இழுக்கேற்படுத்துகின்றன இது மீன் சாப்பிடும் சமூகத்தவர்கள் தம் வயிற்றில் ஏற்படும் நோய்களுக்கு ஃபோமலின் மீன் தான் காரணம் என்று கருதக்கூடியதான ஒரு விதமான வியாதியையும் தோற்றுவித்துள்ளது.

## புகைப்படக் ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கைப் படங்கள் 1977இலேயே எடுக்கப்பட்டுள்ளன,

இயற்கையின் கோலத்தை தத்ரூபவடிவாக்குவதில் இவ் விளம் கலைஞன் அடைந்துள்ள வெற்றி பார்ப்பவரை பிரமிப்படையச் செய்கிறது. கொம்பேராவின் சூரிய அஸ்தமனம்-கொலரடோவின் ஆகாயம்-பெருமேகத்தேசம் கொலரடோ, எனும் படைப்படங்கள் நொடிப்பொழுதில் இயற்கை காட்டும் இன் கோலத்தை கண்முன்னே காட்டி மயக்குகின்றன. மலைக் காட்சிப்பிரியர்களுக்கு ரொக்கி மலைத்தொடர்கள் பதின் மூவாயிரத்து ஐநூறு அடி உயர ரொக்கி மலை ஏரி என்பன நிழற்படமாக நிற்கின்றன. அஸ்பென் மரங்களும் பாலியின் அறுவடைக் காட்சிகளும் கண்களைக் கவருகின்றன. புராதன சின்னங்களிலும் பழமையிலும் பற்றுடையவர்களுக்குமே பார்பத்தார் கோவில்கள் (ஜாவா) பாலி இந்துக் கோவிலும் படங்களாக மாறி நிற்கின்றன. கலிபோர்னியா இளசுகளும் மூனிச்சின் காலை நேரமும் அன்ருடக் காட்சிகள் கமராவில் நுழைந்ததின் சாட்சிகள் நம் ராமாயம் பாலியில் நாடகமாகுவதையும் பாலி ராமாயணத்து அனுமனையும் கூட ஸ்டீபன் பெல்ஸ்இன் காமரா காட்சியாக்கியுள்ளது. இவ்வாருக உலகின் கிழக்கையும் மேற்கையும் ஸ்டீபன் பெல்சின் கமெரா இணைத்து நிற்பதால் ''வண்ணத்தில் கிழக்கும் மேற்கும்'' எனும் தலைப்பு நிழற்படக் கண்காட்சிக்கு இடப்பட்டுள்ளது காலப்பொருத்தமே பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள ஐம்பத்தைந்து படங்களும் உயிர்ப்படைப்புகளே.

இத்தனை கலைப்பொக்கிஷத்தையும் அள்ளித் தந்தது ஒரே ஒரு கமெரா அதுவும் பழைய 35 மி மீ பென்டக்ஸ் மொடல் என் கையில் அதிசயிக்கிருேம், அதுவும் நவீன நுட்பங்கள் இன்றி மூன்றே மூன்று வில்லைகளுடனேயே இக்கலைக்கோவிலை ஸ்டீபன் பெல்ஸ் கட்டி எழுப்பியுள்ளார். என்கையில் படப்பிடிப்புஉலகம் பிரமித்து நிற்கிறது. ஸ்டீபன் பெல்ஸ் மாபெரும் புகைப்படக் கலைஞன் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

1948ல் டவர்ன்போட் எனும் அமெரிக்கச் சிற்றூரில் பிறந்த ஸ்டீபன் பெல்ஸ் கொலராடாவின் உயர் பள்ளி மாணவனுக இருக்கையிலேயே கொலரோடாவின் பல்வகைக் காட்சிகளையும் தன்கமெராவுக்குள் கட்டி ''எழுப்புகதொடங்கிவிட்டார். தென் கலிபோர்னியாவில் புகைப்படப் பத்திரிகையாளராகப் பதவி வகித்து படப்பிடிப்புக்கலையில் வளர்ச்சி பெற்ற இஜ்ர் புகைப் படக் கலைஞர் திறமையைஅடைந்தார் கடந்த ஏழு வருடங்களாக மேற்கு ஜேர்மனியில் இயங்கி வரும் வருக்குப்பதி லைடு மாத வைத்துடைய குழந்தை ஒன்று திருமணப் பரிசாக தற்போது உள்ளது

ஒளியும் நிழலும் இயற்கையாக அமைகின்ற சந்தர்ப்பங்களை அபாரமாகப் படமாக்கி கலையாக்குவதில் இவர் கைதேர்ந்தவராக இயங்குகிருர். கறுத்தவானிலே சிரிக்கும்நிலவு இருண்ட வானிலே இழைபுப் வெண்முகில் இருளும் நேரத்து சூரிய வீழ்ச்சி என்பன பார்ப்பவரை இயற்கை இன்பத்தின் எல்லைக்கே கூட்டிச்சென்றுவிடுகிறது.

அமெரிக்கத் தூதுவர் டொனல்ட் டூசைன் இனல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இப்புகைப்படக் கண்காட்சி கலைப்பிரியர்களுக்கு ஒரு இன்ப உலகு-அறிவுப் பிரியர்களுக்கு ஒரு தாகத்தேன்- புகைப்படப் பிரியர்களுக்கு ஒரு வெற்றி சின்னம்.



காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையினரால் அண்மையில் நடாத்தப்பட்ட ஆறாவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பாக நடனமாடி வெற்றிபெற்ற செல்வி பத்மினி துரைராஜாவின் படத்தை இங்கே காணலாம். இவர் காரைநகரைச் சேர்ந்த திரு. துரைராஜாவின் புதல்வியும் வண்ணை பண்ணையைச் சேர்ந்த ஸ்ரீ சண்முகானந்தா பாலர் பாடசாலை அதிபர் செல்வி அன்னபூரணி முத்துக் மாரனின் மாணவியுமாவார். (இ)

## சமயசேவையைப் பாராட்டி பட்டமும் பொன்னுடையும்

(யாழ்ப்பாணம்)

''ஆறுமுகநாவலரால் தொடக்கிவைக்கப்பட்டபுராணபடன மரபு சிறிது சிறிதாக மறைந்து வருகின்ற இக்காலகட்டத்தில் அத்துறைக்குப் புத்துயிரூட்டி வளர்க்கவேண்டியது எமது சமுதாயத்தின் அவசிய கடமைமையாகும்'' என்று சி. வெங்கடேசசர்மா மயிலணிக் கந்தசுவாமி கோவிலில் கந்த புராணப்படன முடிவில் பங்கு பற்றி உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசும் போது 'முற்காலத்தில் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூடிகள் புராணம் முதலானவற்றை அடிக்கடி கோவில்களில் படிக்கச் செய்து அதன் மூலப் பொதுமக்களுக்கு சைவ சமயத்தில் பற்றையும் உண்மைகளையும் உணர்த்திப் பயனடையச் செய்தனர். இதனுல் ஒழுக்கம், இறைப்பற்று விரதமனுட்டித்தல் முதலிய நற்பண்புகள் சிறந்து விளங்கின'' என்ருர்.

உரையாசிரியர் பண்டிதர் கா. நமசிவாயத்தை பாராட்டி சுன்னுகம் சைவ மகாசபையால் எடுக்கப்பட்ட இவ்விழாவிற்கு கு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை தலைமை வகித்தார்.

தமிழ் இலக்கணம், இலக்கியம், சமயம் ஆகிய சகல துறைகளிலும் வல்லுனராய் பண்டிதர் புராணபடனத்தில் மிகச் சிறப்புற்று விளங்குவதாகவும் தொடர்கையில் புராண படனத்திற்கு இன்றியமையாத சைவசீலம், ஒழுக்கம், சிவசின்னம் ஆகியவை பண்டிதருக்கு அணிகலன்களாக இருக்கின்றன'' என்றும் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார். திரு. சி. திருச்சிற்றம்பலம் பண்டிதருக்குப் பொற்கிளி வழங்கி கௌரவித்தார்;

கோவில் திருப்பணிச் சபையினர் சார்பாக திரு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை பண்டிதர் அவர்களுக்குப் ''புராணபடன வித்தகர்'' என்னும் பட்டத்தைச் சூட்டினுர்.

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் உரையாசிரிய தன்னலப் கருதாது செய்துவரும் சைவப்பணியையும் திருமுறைகளைப் பத்தி சிரத்தையோடு ஓதுதலில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் விளக்கி அவருடைய சேவை

8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேல்லூரியில் அதிபர் இல்லை: ஓரிடத்தில் 5 அதிபர்கள்

## மூதூர் கல்வி வட்டார நிலை சபைக்கு வரும் கேள்வி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கல்விவட்டாரத்திலுள்ள ஆறுகல்லூரிகள் நிரந்தர அதிபர்கள் இன்றி இயங்கும் அதேவேளையில் மூதூர் மகாவித்தியாலயத்தில் அதிபருடன் மேலதிகமாக 4 வித்தியாலய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனராம்.

இதுகுறித்து கொழும்பு மத்திய தொகுதி 3 வது எம்.பி ஜனாப் எம். ஹலீம் இஷாக், கல்வி அமைச்சரைப் பாராளுமன்றத்தில் அடுத்தமாதம் 5-ந் தேதி கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

மூதூர் மக வித்தியாலயத்திலுள்ள மேலதிக நான்கு அதிபர்கள் உட்பட தரப்படுத்தப்பட்ட அதிபர்களை மேற்படி ஆறு பாடசாலைகளில் நிரந்தரமாக நியமிக்க கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்றும் ஜனாப் இஷாக் கல்வி அமைச்சரைக் கேட்பார். (இ)

## கொள்ளையடிக்கையில் பெலிசாரிடம் சிக்கினர்

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவில் சங்கக் கடை ஒன்றின் ஓட்டைப்பிரித்து அங்குள்ள பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்ததாகக் கருதப்படும் மூன்று நபர்களை இரவுரோந்தில் ஈடுபட்டசங்கானைப் பொலிசார் மடக்கிப் பிடித்தனர்.

வட்டுக்கோட்டை துணைவி என்னுமிடத்திலுள்ள சங்கக் கடையில் கொள்ளையடித்துக் கொண்டிருந்ததாகக் கருதப்படும் மேற்படி மூன்று நபர்களையும் சங்கானைப் பொலிசார் கைதுசெய்ததுடன் அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட அரைச் சாக்கு அரிசி, சர்க்கரை, பீடிக்கட்டுகள் என்பவற்றையும் கைப்பற்றினர்கள். இரவு ரோந்து சேவையில் ஈடுபட்ட சங்கானைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் திரு. எஸ். சிவபாதம், கே. ஜி, நளின சேகரா ஆகிய இருவரும் மேற்படி சங்கக் கடையில் ஏதோ சத்தம் கேட்டதை அடுத்து அங்கு சென்றுபார்த்தபோது சந்தேக நபர்கள் தமது முயற்சியை அரைகுறையில் விட்டுவிட்டு மேற்கண்ட பொருட்களுடன் தப்பி ஓடமுயற்சித்தனராம், பொலிசார் இவர்களை மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையம் கொண்டுவந்தனர். இவர்களுக்கும் அண்மைக் காலத்தில் இப்பகுதியில் நடைபெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கும்பொலிசார் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர். (அ)

## இரவு ரோந்தில் சிக்கிய மூவர் றிமாண்டில்

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவு நேரத்தில் மானிப்பாயிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலை பிரசவ வார்ட்டில் உட்புகுந்து அங்குள்ள அறையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிக்குச் சொந்தமான 2000 ரூபா ரொக்கப் பணத்தையும், மற்றும் 1,900 ரூபா பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்ததாக ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்களை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்செய்த போது நீதிபதி திரு.ரி. ஜோகநாதன் இருவரையும் அடுத்த மாதம்3-ம் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். தெல்லிப்பழையைச் சேர்ந்த தணிகாசலம் சின்னத்தம்பி, குருநகரைச்சேர்ந்த நாசமுத்து அருமைராசா ஆகிய இருவருமே இவ்வாறு றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

ஆனைக்கோட்டைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் எம். சுப்பிரமணியம், கே. ஜெயரத்தின ஆகிய இருவரும் மானிப்பாய் சந்தியில் இரவு ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்தபோது அதிகாலை 3-30 மணியளவில் மேற்படி வைத்தியசாலைப்பக்கமாக இருந்து இருவர் வந்துகொண்டிருந்தனராம். அப்போது ஒருவர் பொலிசாரைக்கண்டு மறுபக்கமாக திரும்பி ஓட முயன்றபோது சந்தேகம் கொண்ட பொலிசார் மிகுந்த பிரயத்தனத்தின்பேரில் இருவரையும் மடக்கிப்பிடித்து விசாரணைசெய்தபோது மேற்படி கொள்ளை விபரம் தெரியவந்ததாம்:

வைத்தியசாலையில் தங்கி குழந்தை பிரசவித்த அனலைதீவைச் சேர்ந்த குடும்பம் ஒன்று வைத்தியசாலைக் கட்டணத்தை செலுத்துவதற்காக 2000 ரூபா ரொக்கப் பணத்தையும்- கைக்கடிகாரம் ஒன்று உட்பட சில பொருட்களையும் சூட்கேஸில் வைத்திருந்ததாம். இரவு கடுமையான மழை பெய்துகொண்டிருந்த சமயம் கதவை உடைத்து இக்கொள்ளையை நடத்தியதாக பொலிசார் தெரிவித்தனர். சந்தேக நபர்களின் கைவிரல் அடையாளங்களைப் படம்பிடிக்க நீதிபதி உத்தரவிட்டார். (அ)

## கி. அ. சங்கம் முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சோளன் கிராம அபிவிருத்திச் சங்கம், சவர்க்காரத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இத்தொழிற்சாலை மூலம் கிடைக்கும் லாபப் பணத்தை மேற்படி கிராம அபிவிருத்திக்குச் செலவிடுவதென சோளன் கிராமஅபிவிருத்திச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இத் தொழிற்சாலையை மேலும் விஸ்தரித்து மேற்படி கிராமத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலைவழங்குவதற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. (கொ-அ)

## கான்ஸ்டபிள் வீட்டில் களவு: மூவர் கைது

(பச்சிலைப்பள்ளி)

பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் தமது கைவரிசையைக் காட்டிய கொள்ளையர்கள் அதே பொலிஸ் உத்தியோகத்தர் கடமையாற்றும் பொலிஸ்நிலைய அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டதுடன், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதியும் மீட்கப்பட்டது.

பளைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கட்டைக்காடு என்னுமிடத்தில், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றும் திரு. மரியநாயகத்தின் வீட்டில் மூன்று மாதங்களுக்கு முன்னர் நகைகள், றேடியோ பணம் என்பன இரவு நேரத்தில் கொள்ளையடிக்கப்பட்டன.

இச்சம்பவம் நடைபெற்றபோது பொலிஸ் கான்ஸ்டபிளின் வயோதிபப் பெற்றோரே வீட்டில் தனித்து இருந்தனர்.

அம்பன் கொட்டோடை என்னுமிடத்தில் நடைபெற்ற கொள்ளைபற்றி பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். நூல் தலைமையில் விசாரணை நடத்திவந்த பொலிஸ் கோஷ்டி கட்டைக்காடு கொள்ளை தொடர்பாகவும் மூவரைக் கைதுசெய்து பருத்தித்துறை நீதிபதிமுன் ஆஜர் செய்துள்ளனர். (அ)

## 3 வயதுப் பாலகன் கிருமிநாசினிக்குப் பலி!

(பண்டத்தரிப்பு)

நிலத்தில் ஊற்றப்பட்டிருந்த கிருமிநாசினியைக் கையினால் தொட்டு ருசிபார்த்த மூன்று வயதுப் பச்சிளம் பாலகன் பரிதாபமாக மாண்டார். இச்சம்பவம் இளவாலையில் நடைபெற்றுள்ளது.

இளவாலையைச் சேர்ந்த இராசதுரை போல் ஜெயரஞ்சன் என்ற மூன்று வயது குழந்தையின் மரணவிசாரணை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா முன்னிலையில் நடைபெற்றது. அத்தருணம் காலம் சென்ற பாலகனின் தந்தையான இராசதுரை சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

'சம்பவதினத்தன்று காலம் சென்ற எமது பிள்ளை மற்றைய இரு பிள்ளைகளுடன் சேர்ந்து வீட்டின் பின்பக்கத்தில் விளையாடிக்கொண்டிருந்தது, அத்தருணம் தோட்டத்து மிளகாய்க் கன்றுகளுக்கு தெளிப்பதற்காக வாங்கி வைக்கப்பட்டிருந்த கிருமிநாசினி குறைப் போத்தல் ஒன்று தற்செயலாக தவறி நிலத்தில்விழுந்து கிருமிநாசினி சிந்துப்பட்டிருந்தது. காலம் சென்ற பிள்ளை அந்தக் கிருமிநாசினியை ஏதோ உணவுப் பொருள் என்று நினைத்து தனது கைவிரலால் தொட்டு வாயில் நக்கியது, இதை அவதானித்த மற்றப் பிள்ளைகள் என்னிடம் வந்து சொல்லவே நான் ஓடிச்சென்று பிள்ளையைத் தூக்கினேன். பிள்ளை சுய நினைவற்ற நிலையில் மயங்கிக் கிடந்தது. உடனடியாக தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற போது அங்கு அதன் உயிர் பிரிந்துவிட்டது.'

காலம்சென்ற பிள்ளையின் தாயார் அன்னமேரி ஜேசலினும் சாட்சியமளித்தார். விசாரணை முடிவில் தவறுதலாக கிருமி நாசினி அருந்தியதினால் ஏற்பட்டமரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினர் சாட்சிகளை சங்கானைப் பொலிசார் ஆஜர் செய்தனர். (அ)

## பாடசாலை அ. வி. ச கூட்டம்

(புலோலி)

வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 30 ம் திகதி பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் அதிபர் திரு. சி. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
Black Sunday

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க குறிப்பிட்ட சில தினங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்பிரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வெற்றி முழக்கமிடும் 8-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் விரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

வின்ஸர் இன்னும் சிலதினங்கள் மட்டும் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர் நடித்த
எதிரிகள் ஜாக்கிரதை
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்
(புதிய பிரதி)

ராஜா (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கா-ஜெய்சித்திரா
அசோகன்
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

SANTHI Jaffna - 10-30, 2-30, 4-45, 7-00 & -30
★ SIDNEY POITIER
★ MICHAEL CAINE in
"The Wilby Conspiracy"
Action - Suspense - Thriller - Color
Await! "THE DIRTY DOZEN"

# பாகிஸ்தான் கோஷ்டி வெற்றி

(அரியாலை)

இலங்கைகடற்படைக்கோஷ்டிக்கும், பாகிஸ்தான் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்ட (செற்-அப்) போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டி வெற்றிபெற்றது.

யாழ். மத்தியகல்லூரிமைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலாவது கட்டத்தில் பாகிஸ்தான் கோஷ்டியும் இரண்டாவதுகட்டத்தில் கடற்படைக்கோஷ்டியும் வெற்றியீட்டியபா, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற 3-ம், 4-ம் ஆட்டங்களில் பாகிஸ்தான் கோஷ்டி வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாகவே இருந்தது. (இ)

# கூடைப்பந்தாட்டப் போட்டிகள்

(அரியாலை)

யாழ். பரியோவான் கல்லூரிக்கோஷ்டிக்கும், யாழ். மத்தியகல்லூரிக் கோஷ்டிக்குமிடையேநடைபெற்ற கூடைப்பந்தாட்டப்போட்டியில் யாழ் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 44:42 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது.

பரி யோவான் கல்லூரிக் கோஷ்டிக்கு செல்வன் ரி. துஷ்யந்தனும், மத்தியகல்லூரிக் கோஷ்டிக்கு செல்வன் சுத்தானந்தனும் தலைமை வகித்தனர். திரு. கபிரியேல்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

யாழ். பரியோவான் கல்லூரிக் கோஷ்டிக்கும், ஆசிரியர்-கோஷ்டிக்குமிடையே நடைபெற்றசிநேகபூர்வமான கூடைபந்தாட்டப்போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 68:68 புள்ளிகளைப்பெற்றுச் சமமாகிக் கொண்டன.

இப்போட்டிகள் பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (அ)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
ஞானக்குழந்தை

2-வது வாரம்
வெஸ்லி
(மாவிட்டபுரம்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
அந்தமான் காதலி
(கலர்-புதிய பிரதி)

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-விஜயகுமாரி
மனைவி

யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்க

# இன்று நடைபெறும் அரைஇறுதிப் போட்டிகள்

(பலாலி)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய அரைஇறுதியாட்டத்தின் 3-ம் பிரிவுப் போட்டியில் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரியும், 2-ம் பிரிவுப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை எதிர்த்துக் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் போட்டியிடும். போட்டிகள் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## கால்இறுதி முடிவுகள்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குமிடையிலான 3-ம்பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் மகாஜனக்கல்லூரி2—1 கோல்களால்வெற்றி பெற்றுள்ளது. மத்தியஸ்தராக திரு. பவசிங் கடமையாற்றினார். 2-ம் பரிவுப் போட்டியிலும் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியை 1—0 கோல்களால் மகாஜனக் கல்லூரி வென்றுள்ளது. திரு. எஸ். அன்ரனிப்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## யாழ். மத்திய கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், அளவெட்டி அருணோதயாக்கல்லூரியும் கலந்துகொண்ட இரண்டாம் பிரிவுப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 2 கோல்களைப் போட்டு ஆட்டம் சமமாக முடிவுற்றதால், மேலும் 10 நிமிடம் கொடுக்கப்பட்டன. இம் மேலதிக நேரத்திலும் இரு கோஷ்டிகளும் கோல் எதுவும் போடாததினால் பனல்டி உதைகள் வழங்கப்பட்டது. இப் பனல்டி உதைகள்மூலம் மத்தியகல்லூரி பெற்ற ஒருகோலுடன் ஆட்டம் 3—2 கோல்களால் மத்திய கல்லூரிக்குச் சாதகமாக வெற்றி கிடைத்துள்ளது. மத்தியஸ்தராக திரு. பிலேந்திரன் கடமையாற்றினர், (அ)

# வயாவிளான் ம. ம. வி. மகாஜனவை வென்றது

(பலாலி)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை 2—1 கோல்களால் தோற்கடித்தது. யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்நடாத்திவரும் 1ம் பிரிவு உதைபந்தாட்டக் கால்இறுதிப்போட்டியிலேயே வயாவிளான் ம. ம. வித்தியாலயம் வெற்றி பெற்றுள்ளது. ஆரம்பம் முதல் இறுதிவரை இருதரப்பினரும் மிகவும் திறமையாக விளையாடி தலா ஒரு கோல்களைப் போட்டுக்கொண்டமையால் வெற்றியை நிர்ணயிக்க முடியாத நிலையில் மேலும் 10 நிமிடம் மத்தியஸ்தரினால் கொடுக்கப்பட்டது. இம்மேலதிக நேரத்தில் வயாவிளான் ம. ம. வித்தியாலயம் தமக்குச் சாதகமாகக் கிடைத்த ஒரு பனல்டி உதையை ஸ்வ. தர்மகுலநாதன் மூலம் தமது வெற்றிக்குப் பயன்படுத்திக் கொண்டது. இந்நிலையில் போட்டி 2-1 என்ற கோல் கணக்கில் முடிவுற்றது. மகாஜன வீரர்கள் மெச்சத்தக்க முறையில் விளையாடினர் எனினும் வெற்றியைத் தமதாக்கிக் கொள்ள முடியவில்லை.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஆர். மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார் வயாவிளான் ம.ம. வித்தியாலயம் 1-ம் பிரிவுப் போட்டியில் பங்கு பற்றுவது இதுவே முதல் தடவையென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கூட்டு ஸ்தாபனம் வெற்றி

(பலாலி)

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் கோஷ்டிக்கும், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கூட்டுத்தாபனம் 5—0 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மைதான இல் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. வி. எஸ். அருட்பிரகாசம்மத்தியஸ்தராகக் கடமை யாற்றினர். (அ)

# பாதுகாப்புச்சேவை கோஷ்டி வெற்றி

(பலாலி)

யாழ்ப்பாணம் ஹொக்கி விளையாட்டுச் சங்கக் கோஷ்டிக்கும், இலங்கை பாதுகாப்புச்சேவைக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான ஹொக்கிப் போட்டியில் பாதுகாப்புச் சேவைக்கோஷ்டி 8-0 கோல்களால் வெற்றிபெற்றுள்ளது பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு பொன். சுகுணேந்திரனும், திரு. ரி. சே. டீ. பெரேராவும் நடுவராகக் கடமையாற்றினர். (அ)

# வெற்றி தோல்வி இல்லை

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் பாகிஸ்தான் ஹொக்கி கோஷ்டிக்கும் ஸ்ரீலங்கா தரைப்படை ஹொக்கிக் கோஷ்டிக் மிடையே நடைபெற்ற ஹொக்கிப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ். பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இருந்த பொழுதிலும் இருபக்கத்தாரும் தமக்குக் கிடைத்த பனல்டி அடிக்கும் சந்தர்ப்பத்திலும் ஒரு கோலையேனும் அடிக்க முடியாமல் போய்விட்டது. (இ)

# விநியோகம் பற்றி தெரியாதாம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஒன்பது கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஊடாகப் பெருந்தொகையான கஜூ சவுக்கு போன்ற மரக்கன்றுகள் இலவசமாகப் பொதுமக்களுக்கு இவ்வாரம் விநியோகிக்கப்பட்டன சில கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் முன்னறிவித்தல் எதுவுமின்றி திடீரென இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டதனால் தங்களுக்கு இம்மரக்கன்றுகள் எதுவும் கிடைக்கவில்லை என்று பலர் தெரிவித்தனர்.

# திருட்டு

(கொழும்பு)

வெள்ளம்பிட்டியாவிலுள்ள விகாரையிலிருந்து இரண்டு புத்தர் சிலைகள் திருடப்பட்டுள்ளன.

ஒன்று தங்க முலாம் பூசப்பட்டது. மற்றது வெள்ளி முலாம் பூசப்பட்டது. (இ)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 2வது வாரம்
தினசரி 10-30 2-30 6-30 9-45
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் ★ சீமா ★ புன்னகை அரசி கே. ஆர். விஜயா
நாட்டியப் பேரொளி பத்மினி ★ வி. கே. ராமசாமி ★ மனோரமா
விதுபாலா ★ ரீனு ★ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆல்பரட் ★ மார்ஷல் மற்றும் பலர் ஜொலிக்கும்
ஒரே வானம் ஒரே பூமி
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறு விறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப் படத்திலும் காணக்கிடைக்காத பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டப்பந்தயங்கள் நிறைந்த படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை நூல்கள்

| | |
|---|---|
| பிள்ளையார் கதை | 2 00 |
| பிள்ளையார் புராணம் உரையுடன் | 2-50 |
| விநாயகர்தோத்திரமாலை | 2-50 |
| விநாயகர் அகவலும், கவசமும் | -50 |
| மார்கழிப் பாராயணம் | 2-00 |

**காந்தளகம்**
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



# ஈழநாடு
The Eelanaadu 60 சதம்


## கூட்டுறவு நூலகசேவை

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், மக்களிடையே படிக்கும் பழக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கு நூலக சேவையொன்றை அமுல் செய்துள்ளது.

இத்திட்டத்திற்கு, நல்லூர் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவே பொறுப்பாகவுள்ளது.

## அபிவிருத்தி வேலைகள்

(மன்னார்)
அடுத்த வருடம் ஜனவரி முற்பகுதியில் கப்பல் சேவை ஆரம்பமாகுமுன் தலைமன்னார் துறைமுகப் பகுதியில் பல அபிவிருத்தி வேலைகள் நடைபெறவுள்ளது.

துறைமுகப்பகுதியில் சக்தி வாய்ந்த மின்சார இயந்திர மொன்று இணைக்கப்படும். சுங்கப் பரிசோதனை மண்டபமும் விசாலிக்கப்படும்.

# சீனாவில்பத்திரிகை சுதந்திரம் தாராளம்
## சீனபத்திரிகையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)
"சீன அரசியலமைப்புச் சட்டத்தில் பத்திரிகைச் சுதந்திரம் பேச்சுச்சுதந்திரம் போன்றவை வலியுறுத்தப்பட்டுள்ளன. பத்திரிகையின் தலைமைப்பீடம் எதைப் பிரசுரிக்கவேண்டுமென விரும்புகிறதோ அதைப் பிரசுரிப்பதில் எதுவிததடையுமில்லை. அரசு அதில் தலையிடுவதுமில்லை"

யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சீன யாழ். பத்திரிகையாளர் சந்திப்பின்போது பேசிய சீனப் பத்திரிகைக் குழுவின் தலைவர் திரு. டிங்ஜிங்கன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

திரு. டிங்ஜிங்கன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"சீனாவில் பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரமில்லையென்றும், பீக்கிங் வானொலியில் செய்திகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு பொய்வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன. இதில் எந்தவித உண்மையுமில்லை. பீக்கிங் வானொலியில் பி. பி. ஸி. செய்திஸ்தாபனத்தினதும் மொஸ்கோ வானொலியினதும், தாய்வான், வொய்ஸ்ஒவ் அமெரிக்கா ஆகிய பலநாட்டு வானொலிகளினதும் செய்திகள் ஒலிபரப்பப்படுகின்றன.

நவசீனச் செய்தி ஸ்தாபனம் செய்திகளைக் கொடுக்கிறது. சீனப் பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரிக்கின்றன. அச் செய்தி ஸ்தாபனத்தின் நிருபர் ஒருவர் இலங்கையிலும் இருக்கின்றார். சீனாவிலுள்ள பத்திரிகைகளுக்கு வெளிநாட்டுச் செய்திகளை நவசீனச் செய்தி ஸ்தாபனமே வழங்குகிறது.

சீனாவில் பீக்கிங் டெயிலி போன்ற பல பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன. அப்பத்திரிகைகளில் "மக்கள் கருத்து" என ஒரு பகுதி இருக்கிறது. மக்கள் தங்கள் கருத்துக்களை அப்பகுதிக்கு எழுதுகிறார்கள். தன்னால் செய்யமுடியாத ஒன்றை ஒருவர் எழுதினால் பத்திரிகைகள் அவற்றுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் கருத்தைப் பத்திரிகைகளுக்கு எழுதினால் அவை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

### கலாச்சாரப் புரட்சிக் காலத்தில்

கலாச்சாரப் புரட்சியின் போது அரசுக்கு எதிராக பல சுவரொட்டிகள் வெளியிடப்பட்டன. சீனாவில் கலாச்சாரப் புரட்சி நடைபெற்றபோது திரு. யோகேந்திரா துரைசுவாமி சீனாவில் கடமையாற்றினார். அவரும் அச்சுவரொட்டிகளைப் பார்வையிட்டார்.

### 50க்கு மேற்பட்ட மொழி பேசுவோர் சீனாவில்

ஐம்பதுக்கும் அதிகமான மொழி பேசுபவர்கள் சீனாவில் வாழ்கிறார்கள். அப்படியிருந்தும் அங்கு ஹாட் ஆன், திபெத்மொழிகள்தான் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

### மத சுதந்திரம்

கலாச்சாரப் புரட்சியின் போது சீனாவில் மதசுதந்திரம் இருக்கவில்லை. அப்போது அங்குள்ள ஆலயங்கள் உடைத்தெறியப்பட்டன. இப்போது அங்கு வாழுகின்ற மக்களுக்கு மதசுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

மாஓவின் மனைவி உட்பட்ட நால்வர் குழுவினர் தாங்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள், தங்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதி என்ன என்பதைப் பத்திரிகைகளில் எழுத அவர்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு. அத்தோடு அரசுக்கும்விண்ணப்பிக்க அவர்களுக்கு உரிமையுண்டு.

சீனாவுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் பழைய தொடர்பு இருந்ததற்கான ஆதாரம் ஏதாவது உண்டா எனக் கேட்கப்பட்டபோது சீனர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட சட்டி, பானை, பீங்கான் கோப்பை ஆகியவைகளும் அக்காலத்தில் சீனர் கடலால் இறங்கி அல்லைப்பிட்டிக்கு வந்ததற்கு ஆதாரமாக இரண்டு லொறிகள் ஒரேநேரத்தில் விலத்தக் கூடியதான விசாலமான ஒரு கற்பாதையையும் புதைபொருள் ஆராய்ச்சியாளர் செல்லைப்பிட்டியில் கண்டுபிடித்துள்ளார்கள்: இவை சீனாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் அந்நாளில் இருந்த தொடர்பைக் காட்டுகின்றன என்றும் பொருட்கள் யாழ். நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் யாழ்அரசாங்கஅதிபர் தெரிவித்தார்.

அவற்றைப் பார்வையிடத் தாம் விரும்புவதாகவும் சீனப் பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர். (கொ-அ)

## பாராளு—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆட்சிக்கு மீண்டும் வந்ததும்; வேலைஇழந்த அனைவருக்கும் சம்பளப்பாக்கியுடன் வேலைதரப்போவதாக திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அந்தக்கூட்டத்தில் கூறியுள்ளார். ஆனால் யாழ்ப்பாண மக்கள் மிகவும் புத்திசாலிகள். திருமதி சிறிமாவை நம்பமாட்டார்கள்' என்று கூறிய பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா—

"தமிழ் மக்களுக்கு சிறிமா அரசு செய்த கொடுமைகளை தமிழ்மக்கள் மறக்கமாட்டார்கள்"என்றார்.

"இவரது ஆட்சியில்தான் தமிழ் வாலிபர்கள் நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்"என்று தெரிவித்த பிரதமர்;

"இதனைமறந்து மீண்டும் சிறிமாவை அரசு கட்டிலில் ஏற்றி மீண்டும் தடுப்புக்காவலில் இருக்கப் போகின்றீர்களா?" என்று கேட்டார்.

### சிறிமா அரசில்

"முன்னைய திருமதி சிறிமா ஆட்சியில் தமிழ்த்தலைவர்களும் இளைஞர்களும் சொல்லொணாத் துயர் அடைந்தனர். ஏன், திரு. அமிர்தலிங்கம் கூட வெளிநாடு செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. அவர் தனது மகன் காண்டீபனுக்கு எழுதிய கடிதம்கூட உடைத்து வாசிக்கப்பட்டது" என்று பிரதமர் கூறியபோது; - திரு. அமிர்தலிங்கம்;

"யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஐந்து கட்சிக் கூட்டம் பற்றி தவறான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

திருமதி சிறிமாவின்அரசியல் உரிமை பறிக்கப்படுவதற்கு முன்னரே இக் கூட்டம் பற்றி ஒழுங்குசெய்யப்பட்டதுடன்; தேசிய பொதுப்பிரச்னைகள்குறித்து ஒவ்வொரு தொகுதியிலும் அரசு எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்துவதென்று முன்னரே தீர்மானிக்கப்பட்டது என்றும், இதற்கிணங்கவே யாழ்ப்பாணத்திலும் கூட்டம்நடைபெற்றது என்றும் விளக்கி—

"சந்தர்ப்பசூழ்நிலை உங்களுக்குச் சாதகமான கருத்தை உண்டாக்கிவிட்டது" என்று திரு. அமிர்தலிங்கம் எடுத்துக் கூறினார்.

## சமயசேவை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு நன்றி தெரிவித்திருந்தார். கோவில் குருக்கள் பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்களும் விழாவில் பங்குபற்றிப் பண்டிதருடைய பயன் கூறும் ஆற்றலைப்பாராட்டினார். (—)


## மரண அறிவித்தல்
### திருமதி நடராசா இராசாம்பாள்

நடராசா இராசாம்பாள் காலமாகிவிட்டார்: அன்னார் நடராசாவின் (இளைப்பாறிய மாவட்ட கிராம அபிவிருத்தி மேற்பார்வையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமசுந்தரம், திருமதி அன்னபூரணம் சோமசுந்தரம் அவர்களின் அன்பு மகளும், முருகானந்தன் (U. K,), விவேகானந்தன் (Hatton National Bank City office), பரமானந்தம் (Turquand Youngs & Co,), கேதீஸ்வரன், கௌரி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஞானப்பிரகாசத்தின் அருமைச் சகோதரியும், குமாரசாமி, சச்சிதானந்தம், பாலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

576/6, அம்மன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
7436

## மரண அறிவித்தல்
### திருமதி பாக்கியம் முத்தையா

திருமதி பாக்கியம் காலமானார். இவர் தட்டாதெரு முத்தையாவின் அன்பு மனைவியும். திருமதி நாகம்மாவின் சகோதரியும், சுப்பிரமணியம் (கட்டிடத் திணைக்களம் S.E., யாழ்ப்பாணம்), தணிகாசலம் (ஆசிரியர், ஐசிந்த வித்தியாலயம், பண்டத்தரிப்பு தெய்வேந்திரராஜா (கிறீஸ்), தவமணிதேவி, கண்ணம்மா, செல்வநாயகி, நவமணி, ஆனந்தராணி ஆகியோரின் அருமைத் தாயாரும் இராமநாதன் (மேற்பார்வையாளர், கட்டிடப்பகுதி, கொழும்பு), பாலேந்திரா (மேற்பார்வையாளர், துறைமுகக் கூட்டுத்தாபனம், திருமலை),கோபாலகிருஷ்ணன் (கணக்காளர், இ.போ.ச. மொறட்டுவ), நாகேஸ்வரி, பவளராணி ஆகியோரின் மாமியாரும், சுதர்சன், சசீதரன், சிவசுதன், நிரஞ்சன், நிரோசன், நிர்மலா ஆகியோரின்பேத்தியுமாவார் அன்னாரின் பூதவுடல் 26-11-80 காலை பத்து மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல்மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் கொடுப்பவர்கள்: அ. முத்தையா, 17, அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். மு. சுப்பிரமணியம் (S.E.) (மகன்), கட்டிடத் திணைக்களம், யாழ்ப்பாணம்.
7440

## மரண அறிவித்தல்
### திருமதி சண்முகம் நாகம்மா

திருமதி சண்முகம் நாகம்மா அவர்கள் காலமாகிவிட்டார்கள். இவர் திரு. அ. சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சுந்தரம்பிள்ளை, மயில்வாகனம், தருமலிங்கம் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வே. சுந்தரம்பிள்ளை (உரிமையாளர் விவேகானந்தா அச்சகம்), இராசாத்தி, பொன்மணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 26-11-80 புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் இல. 24, பிறவுண் வீதி இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

24, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
7441

## வெளிநாடுகளில், கப்பல்களில் தொழில்கள் பெற

நவீனமுறையில் தொழிற்பயிற்சிகள்
**1-12-80 ஆரம்பமாகின்றன**

(i) வெல்டிங் (Electric & Gas)—3 மாதம்
(ii) வயறிங் (I.E.E. முறைப்படி)—3 மாதம்
(iii) P.M.G. Certificate—5 மாதம்

**தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம்**
57, 59, பாங்சோல் வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka. No QB 8948/78 The Eelanaadu R. No 45. Cable Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org